AL/2026/25/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (I කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி I)
History of Sri Lanka I (Part I)

25 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை

சுட்டெண் : ................................

**அறிவுறுத்தல்கள் :**

- இவ்வினாத்தாள் பகுதி I, பகுதி II ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
- **பகுதி I** இல் 1 - 40 வரையான **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய** விடைகளை எழுதுக.
- **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
- **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், **பகுதி I** இற்கான விடைத்தாள்களை **பகுதி II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 3 | |
| 2 | 4 - 15 | |
| 3 | 16 - 20 | |
| 4 | 21 - 25 | |
| 5 | 26 - 30 | |
| 6 | 31 - 40 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி I

- **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**1.** (1) சூகரதித்த (2) மகாதித்த (3) கோகன்ண
(4) கச்சகதித்த (5) ஜம்புகோளபட்டினம் (......)

**2.** (1) துல்லத்தன (2) வட்டகாமினி (3) லஞ்ஜிதிஸ்ஸ
(4) கல்லாடநாகன் (5) வோகாரிகதிஸ்ஸ (......)

**3.** (1) சேனாபதி (2) போஜகபதி (3) உதகபதி
(4) தக்கபதி (5) மதெரமஜிபகபதி (......)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



4. (1) கண்டாகார (2) பபுலாகார (3) கடாகார
(4) தான்யாகார (5) சர்பிலாகார (......)

5. (1) பரராஜசேகரன் (2) எதிர்மானசிங்கம் (3) அரித்த கீ வேண்டு
(4) புவிராஜ பண்டாரம் (5) வரோதய சிங்கை ஆரியன் (......)

6. (1) உடபுலத்கம (2) கொத்மலை (3) தும்பறை
(4) தும்பனை (5) தமன்கடுவை (......)

7. (1) சேனாசம்மத விக்கிரமபாகு (2) கரலியத்த பண்டார (3) சேனாலங்காதிகார
(4) ஜயவீரபண்டார (5) செனரத் (......)

8. (1) ரீஸ் டேவிட்ஸ் (2) தொமஸ் மெயிற்லண்ட் (3) ஹென்றிவோட்
(4) ஆதர் கோடன் (5) வெஸ்ற் ரிஜ்வே (......)

9. (1) சரசவி சந்தரச (2) இரசவாஹினி (3) லக்மினி பஹன
(4) லக்ரிவிகிரண (5) சிங்கள பௌத்தயா (......)

10. (1) டி. எஸ். சேனநாயக
(2) டட்லி சேனநாயக
(3) ஜோன் கொத்தலாவலை
(4) என். எம். பெரேரா
(5) எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக (......)

- 11 தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள் வீதம்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) திலோக சுந்தரி - முதலாம் விஜயபாகு
(2) ரத்னாவலி - மானாபரணன்
(3) லீலாவதி - முதலாம் பராக்கிரமபாகு
(4) சுனேத்திரா தேவி - ஆறாம் பராக்கிரமபாகு
(5) குசுமாசனதேவி - முதலாம் விமலதர்ம சூரியன் (......)

12. (1) நிகாயசங்கிராய - தேவரக்கித ஜயபாகு தர்மகீர்த்தி தேரர்
(2) சிங்கள போதிவம்சய - வில்கம்முல தேரர்
(3) தம்பியா அட்டுவா கெட்டபதய - காசியப்பன் V
(4) குத்தில காவியம் - வெத்தாவே ஹிமி
(5) எகெலப்பொல ஹடன - ரணஸ்கல்லே ஹிமி (......)

13. (1) முல்லேரியாப் போர் - ஜாவா ஓ ரிபெய்ரோ
(2) தந்துரைப் போர் - பேறோ லோபெஸ் த சூசா
(3) பலன போர் - தொன் ஜெனிமோ த அஸவிடோ
(4) ரத்தெனிவெல போர் - கொன்ஸ்தாந்தைனோ திசாதி நொறொன்ஜா
(5) கன்னொருவை போர் - தியோகு த மெலோ கெஸ்ட்ரோ (......)

14. (1) நுனோ அல்வாரெஸ் பெரெரா - போர்த்துக்கேய கப்டன் ஜெனரல்
(2) ஜாகொமி கொன் சலவெஸ் - பிரான்சிய போதகர்
(3) விலெம் வன் இம்ஹொவ் - ஒல்லாந்த ஆளுநர்
(4) ஜேம்ஸ் ரெயிலர் - ஆங்கில இனத்தவரான பெருந்தோட்ட முதலாளி
(5) எச். சி. பி. பெல் - பிரித்தானிய சிவில் சேவையாளர் (......)

15. (1) கொழும்பு - கண்டி வீதியை அமைத்தல் - எட்வட் பான்ஸ்
(2) வீதி வரி விதித்தல் - டொரிங்டன் பிரபு
(3) கம்சபாவை மீளத்தாபித்தல் - ஹெர்குலஸ் ரொபின்சன்
(4) தானிய வரி நீக்குதல் - ஆர்தர் ஹவ்லோக்
(5) அருங்காட்சியகம் தாபித்தல் - ஜேம்ஸ் லொங்டன் (......)

[பக். 3 ஐப் பார்க்க

- **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகளின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை.** **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத்** தெரிவுசெய்து **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஸ்ரீ மேகவண்ணன் | A | - தோணிகல கல்வெட்டு |
| (ii) | நான்காம் உதயன் | B | - தெவனகல கல்வெட்டு |
| (iii) | முதலாம் விஜயபாகு | C | - ஹோபிடிகம கல்வெட்டு |
| (iv) | கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் | D | - பனாகடுவ செப்பு தகடு |
| (v) | முதலாம் பராக்கிரமபாகு | E | - கெட்டபேரிய சன்னச |

(1) A B C E D (2) A C D E B (3) A D C B E (4) B E A C D (5) C E D B A (……)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | சப்புமல் குமார | A | - முதலாம் விமலதர்ம சூரியன் |
| (ii) | டிகிரி பண்டார | B | - இரண்டாம் இராஜசிங்கன் |
| (iii) | மக அஸ்தான | C | - ஆறாம் புவனேகபாகு |
| (iv) | கோணப்பு பண்டார | D | - எட்டாம் வீரபராக்கிரமபாகு |
| (v) | அம்புலுகல குமார | E | - முதலாம் இராஜசிங்கன் |

(1) A E B C D (2) A D C E B (3) B D E A C (4) C D B A E (5) C E B A D (……)

**18.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஜோன் டொயிலி | A | - இலங்கை |
| (ii) | ஹென்றி மார்ஷல் | B | - இலங்கையில் 11 வருடங்கள் |
| (iii) | தோமஸ் ஸ்கின்னர் | C | - இலங்கையின் புராதன நீர்ப்பாசனப் பணிகள் |
| (iv) | ஜோனதன் போப்ஸ் | D | - கண்டி இராச்சியத்தின் அரசியலமைப்பு தொடர்பான வரைபு |
| (v) | ஆர். எல். புரோஹியர் | E | - இலங்கையில் ஐம்பது வருடங்கள் |

(1) A B D C E (2) B A E C D (3) D A E B C (4) D C B E A (5) E A C B D (……)

**19.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | தொலமி | A | - இலங்கையில் போர்த்துக்கேயர் கொள்கை பற்றிய விமர்சனம் |
| (ii) | பிளினி | B | - இலங்கையைக் குறிப்பிடும் முதல் தேசப்படம் |
| (iii) | பாஹியன் | C | - சிவனொளிபாத மலை யாத்திரை பற்றிய விவரிப்பு |
| (iv) | இப்னு பதூதா | D | - அபயகிரி விகாரை பற்றிய விவரிப்பு |
| (v) | குவேரோஸ் | E | - உரோமுக்கு அனுப்பப்பட்ட இலங்கை தூதுப் பயணம் பற்றிய விவரிப்பு |

PAST PAPERS WIKI

(1) A B E D C (2) A C B D E (3) B D E A C (4) B E D C A (5) C D A E B (……)

**20.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | சார்ள்ஸ் த சில்வா பட்டுவன்துடாவ | A | - தொழில் அமைச்சர் |
| (ii) | டி. பி. ஜயதிலக | B | - தொடர்பாடல் மற்றும் வேலை அமைச்சர் |
| (iii) | ரி. பி. பானபொக்க | C | - உள்நாட்டு விவகார அமைச்சர் |
| (iv) | பெரி சுந்தரம் | D | - சுகாதார அமைச்சர் |
| (v) | மொஹமட் மாக்கான் மாக்கர் | E | - உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் |

(1) A D E C B (2) A E B C D (3) B A C E D (4) C D A E B (5) E C D A B (……)

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரேயுள்ள **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**21. வலகம்பா மன்னன் ஆட்சி**

(1) ஏழு தமிழர்களின் ஆக்கிரமிப்பு
(2) தீய பிராமணனின் கலகம்
(3) ஏக்நலியா பஞ்சம்
(4) தனிப்பட்ட முறையில் ஆராமை காணிக்கை
(5) திரிபிடகம் எழுத்துருவம் பெறுதல் (......)

**22. இசுருமுனிய செதுக்கல்கள்**

(1) 'மனிதனும் குதிரைத் தலையும்' என்பது மிக முக்கியமான செதுக்கல்
(2) 'இசுருமுனி காதலர் சோடி' செதுக்கல் சாலிய மற்றும் அசோகமாலா ஆகியோரை வெளிப்படுத்திக் காட்டுவதாகக் கருதப்படுகிறது.
(3) நாக உருவ செதுக்கல் கொண்ட குட்டம் பொக்குண இசுறுமுனியாவில் அமைந்துள்ளது.
(4) நீராடும் யானைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
(5) இசுருமுனி செதுக்கல்களில் பல்லவர் கலைமரபுச் செல்வாக்கு உள்ளதெனக் கருதப்படுகிறது. (......)

**23. ஒல்லாந்தருக்கும் கண்டி இராச்சியத்துக்கும் இடையிலான தொடர்பு**

(1) 1602 இல் ஒல்லாந்தர் பிரதிநிதிகள் குழுவொன்று முதலாம் விமலதர்ம சூரிய மன்னனைச் சந்தித்தது.
(2) 1638 இல் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்துடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.
(3) ஒல்லாந்தர் 1765 இல் கண்டியை ஆக்கிரமித்தனர்.
(4) 1766 இல் ஒல்லாந்தரினால் கண்டி மன்னனுடன் ஒப்பந்தம் ஒன்றுக்கு கையொப்பமிடப்பட்டது.
(5) யோசப் வாஸ் பாதிரியார் ஒல்லாந்தரின் அனுசரணையுடன் கண்டியில் கத்தோலிக்க சமயத்தைப் பிரசாரம் செய்தார். (......)

**24. கோல்புறூக் - கமரன் சீர்திருத்த முன்மொழிவுகள்**

(1) ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்படுதல்.
(2) இராஜகாரிய முறை நீக்கப்படுதல்.
(3) ஒன்றிணைந்த நிர்வாக முறைமையை தாபித்தல்.
(4) சிவில் சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுதல்.
(5) சட்ட நிர்வாகசபை சட்ட நிருபணசபை தாபிக்கப்படுதல். (......)

**25. இலங்கைக்கு சுதந்திரம் வழங்குதல்**

(1) 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டது.
(2) சுதந்திர இலங்கையின் முதலாவது ஆளுநராக சோல்பரிப் பிரபு நியமிக்கப்பட்டார்.
(3) பொதுநலவாய அமைப்பினுள் சுதந்திரமான சுயாட்சியுடைய நாடாக இலங்கை விளங்கியது.
(4) பிரித்தானிய பாராளுமன்றத்தினால் 1947 இலங்கை சுதந்திர சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.
(5) இங்கிலாந்து மன்னன் தொடர்ந்தும் இலங்கை அரசின் தலைவராக கருதப்பட்டார். (......)

[பக். 5 ஐப் பார்க்க

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

  **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **1** எனவும்
  **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **2** எனவும்
  **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **3** எனவும்
  **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **4** எனவும்
  **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் .......... **5** எனவும்

  **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** இலங்கையில் ஆரம்ப குடியிருப்புகள் தாபித்தல் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) வம்சக்கதைகளுக்கேற்ப ஆரம்ப குடியிருப்பாளர்கள் வட இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு வந்தனர்.
(B) ஆரம்ப குடியிருப்புகள் வரண்ட வலயத்தில் நதிக்கரையோரங்களில் தாபிக்கப்பட்டன.
(C) மகாவம்சத்துக்கு ஏற்ப ஆரம்ப குடியிருப்பாளர்களின் பிரதான வாழ்வாதாரமாக வர்த்தகம் இருந்தது.
(D) சொத்திசாலா என்பது ஆரம்ப குடியேற்றங்களின் பொதுக் கூட்ட மண்டபமாகும். (……)

**27.** வசப மன்னனின் ஆட்சி தொடர்பாக பின்வரும் எந்தக் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) வசப மன்னன் இலம்பகர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளன் ஆவான்.
(B) வசப மன்னனின் காலத்துக்கு உரிய கல்வெட்டுகள் தீவின் பல்வேறு பிரதேசங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
(C) வல்லிபுரம் பொற்சாசனம் வசப மன்னனின் காலத்துக்கு உரியது.
(D) பெரிய அளவிலான குளங்கள் கட்டுதல் வசப மன்னன் காலத்தில் ஆரம்பமானது. (……)

**28.** இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைதல் தொடர்பாக பின்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்து எழுந்த அச்சுறுத்தல்கள்
(B) கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பும் அவனது ஆட்சியின் விளைவுகளும்
(C) நீர்ப்பாசன வேலைகளை உரிய முறையில் பராமரிக்காமை
(D) பிளேக் தொற்றுநோய் பரவுதல் (……)

**29.** கண்டி இராச்சியத்தின் நிர்வாகம் பற்றிய பின்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ஸ்ரீ விஜய இராஜசிங்கன் மூன்று அதிகாரம் பதவிகளை உருவாக்கினான்.
(B) மன்னன் இராஜாதி இராஜசிங்கன் எகலபொலையை மகாஅதிகாரமாக நியமித்தான்.
(C) மன்னனுக்கும் அரண்மனைக்குமான சேவைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கிய வழியாக வரி ஒழுங்கமைப்பு காணப்பட்டது.
(D) மரண தண்டனையை விதிக்கும் அதிகாரம் அரசனிடம் மட்டுமே இருந்தது. (……)

**30.** தேசியமயமாக்கல் கொள்கை தொடர்பாக பின்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) 1956 பொதுத் தேர்தலினால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் தேசிய மயமாக்கல் கொள்கையை ஆரம்பித்தது.
(B) ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் வழங்கப்பட்ட தேர்தல் உறுதிமொழிக்கமைய தேசியமயமாக்கல் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது.
(C) 1958 ஆம் ஆண்டில் பேருந்துகளை தேசியமயமாக்கல் இடம்பெற்றது.
(D) 1960 இல் பெருந்தோட்டங்களை தேசியமயமாக்கல் இடம்பெற்றது. (……)

[பக். 6 ஐப் பார்க்க

- **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய காலம் தொடர்பான புராதன விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?
(1) தெரணியகல குகை (2) பகவா குகை (3) பத்திராஜவெல
(4) ஆசன குகை (5) அட்டசெட்ட குகை (……)

**32.** அரசுரிமை பெறுவதற்காக முதன்முதலில் இந்தியப் படைகளின் உதவியைப் பெற்ற இலங்கை மன்னன் யார்?
(1) முதலாம் ஸ்ரீநாகன் (2) இளநாகன் (3) இரண்டாம் ஸ்ரீநாகன்
(4) குஜ்ஜநாகன் (5) மகாநாகன் (……)

**33.** கம்பளைக் காலத்துக்கு உரிய இலங்காதிலக விகாரையை உருவாக்கிய கட்டிடக்கலை நிபுணர் யார்?
(1) தேவேந்திர முலாசாரி (2) கணேஸ்வராச்சாரி (3) ஸ்தபதிராயர்
(4) நிலகம பட்டபந்தா (5) தேவரகம்பொல சில்வத்தன (……)

**34.** வெலிவிற்ற சரணங்கர சங்கராஜ தேரரின் ஆசிரியரான பிக்கு யார்?
(1) சூரியகொட உன்னான்சே (2) கொரதொட்ட தம்மக்கந்த தேரர்
(3) தேவனகல ரத்னாலங்கார தேரர் (4) திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கலதேரர்
(5) வாரியபொல ஸ்ரீ சுமங்கலதேரர் (……)

**35.** 1848 போராட்டத்தின் போது முடி சூட்டப்பட்ட தலைவர் யார்?
(1) புரன் அப்பு (2) கிவுலெகெதர மொஹட்டால
(3) நிக்கபிட்டியே பண்டார (4) அம்பன்வெல ரால
(5) கொங்காலேகொட பண்டா (……)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | பொலன்னறுவையின் தெமல மகாசாயா முதலாம் இராஜராஜ மன்னனால் கட்டப்பட்டது. | ஜாதக கதை நூல் தம்பதெனிய இராசதானி காலத்தில் எழுதப்பட்டதாகும். | (……) |
| **37.** | நிஸங்க அழகக்கோனாரினால் தாறு கிராமத்தில் கட்டப்பட்ட கோட்டையானது, கோட்டை இராசதானிக்கான அடிப்படையை ஏற்படுத்தியது. | கோட்டை ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் ஜோதிய சித்தானா கலகம் ஒன்றை ஏற்படுத்தினான். | (……) |
| **38.** | புதிய களனி விகாரையின் ஓவியங்கள் சோலியஸ் மெண்டிஸினால் வரையப்பட்டவையாகும். | அரச சபையின் முதல் சபாநாயகர் பிரான்சிஸ் மொலமுரே ஆவார். | (……) |
| **39.** | 1959 இல் வித்தியோதயா பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டது. | இலங்கை பல்கலைக்கழகத்தின் முதலாவது உப வேந்தர் நிக்கலஸ் ஆட்டிகல ஆவார். | (……) |
| **40.** | இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தின் இறுதியிலிருந்து இலங்கை தேசிய சங்கம் இலங்கையின் தேசிய இயக்கத்தில் முக்கிய வகிபாகத்தை நிறைவேற்றியது. | பொன்னம்பலம் அருணாசலத்தின் தலைமையில் 1919 இல் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய சங்கம் அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் மற்றும் இலங்கை மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள பிரித்தானிய ஆட்சியாளருடன் கலந்துரையாடல்களை நடாத்தியது. | (……) |

※※

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

| | | |
|---|---|---|
| ශ්‍රී ලංකා ඉතිහාසය I<br>இலங்கை வரலாறு I<br>History of Sri Lanka I | 25 | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..................................



Past Papers Wiki



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

| | |
|---|---|
| ශ්‍රී ලංකා ඉතිහාසය | I (II කොටස) |
| இலங்கை வரலாறு | I (பகுதி II) |
| History of Sri Lanka | I (Part II) |

25 T I

இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை

**அறிவுறுத்தல்கள் :**

- நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- பகுதி II ஆனது A, B, C ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி A இன் வினா கட்டாயமானது.
- பகுதி B, C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, மேலும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.
  (முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) கதம்ப நதி | (ii) கதிர்காமம் | (iii) சப்பிரகமுவ மாகாணம் |
| (iv) கலா வாவி | (v) நல்லூர் | (vi) சிலாபம் |
| (vii) செங்கடகல | (viii) லங்கா பட்டுன | (ix) ஊர்காவற்துறை |
| (x) களனி கங்கை | (xi) பொலன்னறுவை | (xii) கோட்டை |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** அனுராதபுரக் காலத்தின் இறுதி வரை இலங்கையின் வரலாற்றைக் கற்பதில் பாளி வம்சக் கதைகளின் முக்கியத்துவத்தைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

**3.** "கவந்தீச மன்னனால் இடப்பட்ட அத்திவாரத்தின் மீது துட்டகைமுனு மன்னன் எல்லாள மன்னனைத் தோற்கடித்து நாடு முழுவதையும் ஒன்றிணைத்தான்."

(i) கவந்தீச மன்னனின் தந்தையின் பெயர் யாது? (01 புள்ளி)

(ii) துட்டகைமுனு மன்னனின் சகோதரனின் பெயர் யாது? (01 புள்ளி)

(iii) கவந்தீச மன்னன் உருகுணையை ஆட்சி செய்த காலத்தில் இராசரட்டையில் நிலவிய அரசியல் நிலைமைகள் பற்றிச் சுருக்கக் குறிப்பு எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) கவந்தீச மன்னனால் நிறைவேற்றப்பட்ட வகிபாகம் தொடர்பாக கவனஞ்செலுத்தி துட்டகைமுனு மன்னனின் அரசியல் அடைவினை மதிப்பீடு செய்க. (10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

[பக். 8 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**4.** பின்வரும் தொனிப் பொருள்களின் கீழ் பொலன்னறுவை காலத்தின் கலாசார நிலைமைகளைப் பரிசீலிக்குக.

(i) சமய விருத்தி (06 புள்ளிகள்)

(ii) கலை மற்றும் கட்டிடக் கலை (10 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) தாதுசேன மன்னன்

(ii) அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவைக் காலங்களில் வெளிநாட்டு வர்த்தகம்

(iii) தம்பதெனிய காலத்தில் கலாசாரமும் இலக்கியமும்

(iv) யாழ்ப்பாண இராச்சியமும் தீவின் ஏனைய இராச்சியங்களுக்கு இடையிலான தொடர்பும்

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேயரினாலும் ஒல்லாந்தரினாலும் பின்பற்றப்பட்ட பொருளாதார கொள்கைகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஒப்பீடு செய்க.

(i) பிரதான நோக்கங்கள்

(ii) பின்பற்றப்பட்ட செயன்முறைகள்

(16 புள்ளிகள்)

**7.** "1817 - 1818 மக்கள் எழுச்சி இலங்கையில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக எழுந்த முக்கிய எதிர்ப்பு இயக்கமாகும்."

(i) மக்கள் எழுச்சி இடம்பெற்ற காலப் பகுதியில் இலங்கையில் பணியாற்றிய பிரித்தானிய ஆளுநரின் பெயர் தருக. (01 புள்ளி)

(ii) அக்காலத்தில் கண்டியில் இருந்த பிரித்தானிய ரெசிடன்யரின் பெயரினை எழுதுக. (01 புள்ளி)

(iii) கண்டி உடன்படிக்கையின் முக்கிய உறுப்புரைகள் பற்றிச் சுருக்கக் குறிப்புகள் எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) 1817 - 1818 மக்கள் எழுச்சிக்கு ஏதுவான காரணிகளை விமர்சன ரீதியில் பரிசிலிக்குக. (10 புள்ளிகள்)

**8.** பிரித்தானியரின் கீழ் இலங்கையில் தேயிலை பயிர்ச் செய்கையின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை பரிசீலிக்குக.

(16 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர்கள்

(ii) பிரித்தானியரின் ஆட்சியில் இந்நாட்டின் விவசாய இயக்கங்கள்

(iii) சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா

(iv) நிறைவேற்று சனாதிபதி பதவி

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library